**அதிக லாபம் தரும் திசு வாழை சாகுபடி**

First Published : 28 Jul 2011 12:00:00 AM IST



திசு வாழை சாகுபடி முறையில் செழித்து வளர்ந்திருக்கும் வாழைத்தாரை பார்வையிடும் விவசாயி ராஜா.

விழுப்புரம்: திசு வாழை பயிரிட்டால் நிகரலாபம் அதிகம் பெறலாம் என்று இவ்வாழை ரகத்தை பயிரிட்டு பலன்பெற்ற விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

தோட்டக்கலைத் துறையில் சாகுபடிக்கு பரிந்துரை செய்யும் பல பயிர்களில் வாழை மருத்துவ குணம் நிறைந்ததால் முக்கியமான பயிராக கருதப்படுகிறது. விழுப்புரம் மாவட்டத்தில் உள்ளூர் தேவைகளுக்கும், மண்வகைகளுக்கு உகந்த வகையிலும் மொந்தன், பூவன் போன்ற வாழை ரகங்கள் சாகுபடி செய்யப்படுகின்றன.

தமிழகத்தில் ரோபஸ்டா வாழை 50 சதவீத பரப்பளவில் சாகுபடி செய்யப்படும் நிலையில், விழுப்புரம் மாவட்டத்தில் இதன் சாகுபடி இன்னமும் ஆரம்ப நிலையிலேயே உள்ளது. இதற்கு காரணம் வர்த்தக ரீதியில் இந்த வாழையினை சாகுபடி செய்து அதிக லாபம் பெற முடியும் என்பதனை பெரும்பாலான விவசாயிகள் அறியாதது தான்.

விழுப்புரம் மாவட்டத்தில் வாழை 919 எக்டர் பரப்பளவில் சாகுபடி செய்யப்படுகிறது. இதில் மொந்தன் வாழை 60 சதவீத பரப்பளவிற்கு சாகுபடி செய்யப்படுகிறது. தற்போதைய மொந்தன் வாழையின் உற்பத்தித்திறன் 62.5 மெட்ரிக் டன்னாகும். இதன் மூலம் விவசாயிகள், காய்கள்

மற்றும் இலைகளை குத்தகை அடிப்படையில் விடுவதன் மூலம் ஆண்டுக்கு 0.5 ஏக்கரிலிருந்து ரூ.43,500 வரை நிகர லாபமாக பெற்று வருகின்றனர்.

ஆனால் வளர்ந்து வரும் மக்கள் தொகை தேவைக்கேற்பவும், ஏற்றுமதிக்கு உகந்த வகையிலும், வாழை உற்பத்தித் திறனை அதிகப்படுத்த வேண்டியது அவசியமாகிறது. இதற்கு உயர் தொழில்நுட்பங்களான திசு வாழை சாகுபடி, சொட்டுநீர் பாசன முறை, அடர்நடவு சாகுபடி, தேவைப்படும் பயிர்பாதுகாப்பு முறைகளை கையாளுதல், நிழல்பயிர் சாகுபடி, காற்றுத் தடுப்பான் பயிர் சாகுபடி போன்றவைகள் தீர்வாக உள்ளன.

இதன் அடிப்படையில் சென்ற ஆண்டில் கோலியனூர் வட்டாரம், பிடாகம் கிராமத்தைச் சேர்ந்த முன்னோடி விவசாயி அ. ராஜா தனது 0.5 ஏக்கர் நிலத்தில் 500 கன்றுகள் நடவு செய்து தற்சமயம் ஜி9 வாழை ஒவ்வொன்றும் சராசரியாக 35 கிலோ எடை வருமாறு உற்பத்தி செய்துள்ளார்.

இந்த 0.5 ஏக்கரிலிருந்து கிடைத்துள்ள இந்த தார்களை தற்சமயம் கோயம்பேடு சந்தை விலையான கிலோ ரூ.9.80-க்கு விற்பனை செய்தாலும் ரூ.1,71,500 வரை மொத்த வருமானமாகவும், ரூ.1,21,500 வரை நிகர லாபமாகவும் கிடைத்துள்ளதாக தெரிவித்தார்.

இதே கிராமத்தைச் சேர்ந்த மனோகர், வளவனூர் கிராமத்தைச் சேர்ந்த ராஜசேகர் போன்ற விவசாயிகளும் கோலியனூர் ஒன்றிய தோட்டக்கலைத்துறை மூலம் திசு வாழைக் கன்றுகளை 50 சதவீத மானிய விலையில் பெற்று ஜி9 வாழை சாகுபடியில் திருப்திகரமான முறையில் உற்பத்தி செய்துள்ளார்கள்.

பிடாகம் கிராமத்தைச் சேர்ந்த அ.ராஜா மற்றும் மனோகர் ஆகிய விவசாயிகள் திசு வாழையை சிறந்த முறையில்சாகுபடி செய்துள்ளதை ஊக்குவிக்கும் பொருட்டு இந்த விவசாயிகளுக்கு ஆத்மா திட்டத்தின்கீழ் ஒவ்வொருவருக்கும் தலா ரூ. 2000 வீதம் விவசாயிகளுக்கான பரிசுத் தொகை கோலியனூர் தோட்டக்கலைத் துறை மூலம் வழங்கப்பட்டுள்ளதாக உதவி இயக்குநர் முனைவர் க. வீராசாமி தெரிவித்தார்.

வழிகாட்டுதல்

விழுப்புரம் தோட்டக்கலை துணை இயக்குநர் என். பன்னீர்செல்வம் இதுகுறித்து கூறியது:

கடந்த 2009-ம் ஆண்டில் ஜி9 திசு வாழையினை பிப்ரவரி மாதத்தில் சாகுபடி செய்த விவசாயிகள் எர்வீனியா வாடல் நோயால் பாதிப்பு அடைந்ததால் மிகவும் கவலை அடைந்திருந்தனர். ஆனால் சென்ற ஆண்டில் தேசிய வாழை ஆராய்ச்சி நிலைய வழிகாட்டுதலின் படியும், வட்டார தோட்டக்கலை வழிகாட்டுதலின் படியும் விவசாயிகள் அ.ராஜா, மனோகரன், ராஜசேகர் ஆகியோர் ஜூலை மாதத்தில் ஜி9 திசு வாழையை நடவு செய்து சீரிய முறையில் பராமரித்து நல்ல விளைச்சலை பெற்றுள்ளார்கள்.

மேலும் திசு வாழையில் அடர்நடவு சாகுபடி முறைகளையும், சொட்டுநீர் உர நிர்வாக முறைகளையும் காலத்தே பயிர் பாதுகாப்பு, காராமணி, சணப்பை போன்ற நிழல் பயிர் சாகுபடி, காற்று தடுப்பான் பயிர் (உதயம் வாழை, அகத்தி) சாகுபடி போன்ற காரணிகளை கடைபிடித்தால்

ஜி9 திசு வாழைசாகுபடியில் தற்சமயம் நெல்லுக்கு அடுத்ததாக பயிர் சுயற்சி முறையில் சாகுபடியிலுள்ள மொந்தன் வாழையைக் காட்டிலும் அதிக உற்பத்தி மற்றும் அதிக வருமானம் பெற இயலும்.

மேலும் சொட்டுநீர் பாசன முறையில திசு வாழை சாகுபடி செய்தால் கூடுதலான வருமானம் பெற இயலும். 50 சதவீத மானியத்தில் திசு வாழை செடிகளுக்கும், 65 சதவீத மானிய விலையில் சொட்டு நீர்ப்பாசன தேவைகளுக்கும் தங்கள் ஒன்றியத்திலுள்ள தோட்டக்கலைத்துறை உதவி வேளாண்மை அலுவலர்களை அணுகலாம் என்று தெரிவித்தார்.

திசுவாழை பயிர்களை ஜூலை, ஆகஸ்ட் மாதத்திற்குள் பயிரிட்டால் மழைக்கால பாதிப்புகள் இல்லாமல் அதிக மகசூல் பெறலாம் என்று வேளாண் அலுவலர்கள் கருத்து தெரிவித்துள்ளனர். விவசாயிகளின் நேரடி அனுபவத்தை தெரிந்து கொள்ள, அ. ராஜாவை 9443322770 என்ற எண்ணிலும், மனோகரை 9865329845 என்ற எண்ணிலும் தொடர்பு கொண்டு மேலும் விளக்கங்கள் பெறலாம்.

**குறைந்த செலவு, நிறைந்த மகசூல்: செம்மைக் கரும்பு சாகுபடியில் சாத்தியம்**

First Published : 28 Jul 2011 12:00:00 AM IST



கடலூர்: கரும்பு சாகுபடியில் குறைந்த செலவில் நிறைந்த மகசூல் பெறுவதற்கு புதிய முறையான, செம்மைக் கரும்பு சாகுபடி செய்யுமாறு வேளாண் துறை பரிந்துரைத்துள்ளது.

குறைந்த விதை, குறைந்த நீர், தேவைக்கு ஏற்ப உரம், ஊடுபயிர் ஆகியவற்றால் அதிக மகசூல் பெறுவதற்கு, செம்மைக் கரும்பு சாகுடி என்ற புதிய தொழில்நுட்பம் உதவுகிறது.

இந்த புதிய தொழில்நுட்பம் குறித்து வேளாண் இணை இயக்குநர் இளங்கோவன் அளிக்கும் பரிந்துரைகள்: 2 முதல் 3 பருவுள்ள விதைக் கரணைகளை, நேரடியாக நிலத்தில் நடுவதற்குப் பதில், செம்மைக் கரும்பு சாகுபடி முறையில் விதைக் கரணையில் ஒரு பருவை மட்டும் வெட்டி

எடுத்து, குழித்தட்டு மூலம் கரும்பு நாற்றங்கால் அமைக்க வேண்டும். விதைக் கரணையில் இருந்து பருக்களை வெட்டுக் கருவி மூலம் வெட்டி எடுத்து, மக்கிய தென்னை நார் கழிவு நிரப்பிய பிளாஸ்டிக் குழித்தட்டுகளில் நீர் ஊற்றி, முளைக்க வைக்க வேண்டும். 25 முதல் 35 நாள் வயதுள்ள நாற்றுக்களை நடவேண்டும். இதனால் பழைய முறையில் 2 மாதத்தில் ஏற்படும் வளர்ச்சியை, ஒரே மாதத்தில் பெறமுடியும்.

வயலில் வரிசைக்கு 5 அடி அகலம் விட்டு, நாற்றுக்களுக்கு இடையே 2 அடி இடைவெளி விட்டு நடவேண்டும். பழைய முறையில் ஏக்கருக்கு 48 ஆயிரம் விதைக் கரணைகளை நட்டு, இறுதியில் 25 ஆயிரம் எண்ணிக்கை கரும்புகளைப் பெறுவதற்குப் பதில், ஏக்கருக்கு 5 ஆயிரம் நாற்றுக்கள் மட்டும் நட்டு, 45 ஆயிரம் முதல் 55 ஆயிரம் வரை கரும்பு எண்ணிக்கை பெறமுடியும் என்று விஞ்ஞானிகளின் ஆய்வு தெரிவிக்கிறது. இளம் நாற்றுகளில் அதிக கிளைகள் விட்டு சீரான வளர்ச்சி காணப்படுகிறது. காற்றோட்டம் சூரிய, ஒளி உள்புகுதல் அதிகரிக்கிறது.

தேவையான அளவு ஈரப்பதம் அளிக்க சீரான நீர் நிர்வாகம் தேவை. வயலில் அதிக நீர் தேக்கம் வளர்ச்சியைக் கட்டுப்படுத்தும். புதிய நாற்று நடவு முறையில் 30 சதவீதம் முதல் 40 சதவீதம் வரை நீர் தேவையை குறைக்க முடியும். சொட்டுநீர்ப் பாசனம் மூலம் 80 சதவீதம் வரை நீரை

சிக்கனப்படுத்தலாம். அதிக அளவில் ரசாயன, பூச்சிக் கொல்லி மருந்துகளை பயன்படுத்தாமல், உயிரி முறையில் பூச்சி நிர்வாகம் சிபாரிசு செய்யப்படுகிறது. இதனால் நிலத்தில் நீண்டகால பயனைப் பெறமுடியும்.

கரும்பில் காராமணி, உளுந்து, பயறு, கத்தரி, கொண்டைக் கடலை போன்றவற்றை ஊடுபயிராகப் பயிரிட்டு அதிக லாபம் பெறமுடியும். இதனால் களை வளர்ச்சி

கட்டுப்படுத்தப்படும். நிலத்தைச் சிறந்த முறையில் பயன்படுத்த முடிகிறது.

÷செம்மைக் கரும்பு சாகுபடி மூலம் நீர் தேவை 30 சதவீதம் வரை குறைகிறது, மகசூல் ஏக்கருக்கு 50 முதல் 70 டன் வரை கிடைக்கும். ஊடுபயிர் மூலம் கூடுதல் வருவாய் அதிகரிக்கிறது. கரும்பு எண்ணிக்கை உயர்வதுடன் எடையும், நீளமும் அதிகரிக்கிறது. சாகுபடி செலவு குறைகிறது. கரணையில் இருந்து நாற்றுக்காக பருக்களை வெட்டி எடுத்தபின், கரும்பை ஆலை அரவைக்கு அளித்து விடலாம். விதைக் கரணைச் செலவில் 75 சதவீதம் குறைகிறது என்றும் பரிந்துரைகள் தெரிவிக்கின்றன.

**மீனவர்களுக்கு செல்போனில் தகவல் சேவை**

First Published : 27 Jul 2011 10:02:48 AM IST

ராமேசுவரம், ஜூலை 26: புயல் மற்றும் இயற்கை சீற்றம் குறித்து தெரிந்துகொள்ள முதன்முறையாக செல்போனில் மீனவர்கள் தகவல் பெறலாம் என தங்கச்சிமடம் சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவன அலுவலர் ஸ்ரீகிருபா தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் செவ்வாய்க்கிழமை விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளதாவது:

கடலின் இயற்கை சீற்றம், மீன்களை கையாளும் முறை, கடல் வளங்களை பாதுகாத்தல் குறித்து எம்.எஸ். சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம் மூலம் ஏற்கெனவே தமிழக மீனவர்களுக்கு செல்போன் மூலம் எஸ்எம்எஸ் செய்திகள் அனுப்பி வைக்கப்பட்டது.

தற்போது இந்தியாவில் முதன்முறையாக இந்திய தேசிய கடல் தகவல் சேவை மையத்துடன் சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம் இணைந்து, மீனவர்களின் சந்தேகங்களுக்கு உடனடியாக பதில் கிடைக்க ஹெல்ப் லைன் சேவையை துவக்கி உள்ளது.

காற்றின் வேகம், அலையின் உயரம், மீன்கள் அதிகமாக கிடைக்க வாய்ப்புள்ள பகுதிகள், புயல் மற்றும் இயற்கை சீற்றம், ஜிபிஎஸ் கருவி குறித்த சந்தேகங்கள், மீன்வளத் துறை சார்ந்த கேள்விகளுக்கு இந்த சேவை மூலம் விளக்கமான பதில் கிடைக்கும்.

இந்த தகவலை கடல் சார்ந்த நிபுணர் குழுவினர் மீனவர்களுக்கு தெரிவிப்பார்கள். மேலும் சில சந்தேகங்களுக்கு நிபுணர் குழுவினர் மீனவர்களின் செல்போனில் தொடர்பு கொண்டும் விளக்கம் அளிப்பார்கள். எனவே, மீனவர்கள் தங்களுடையை கடல் சார்ந்த சந்தேகங்களை 9282442312 என்ற ஹெல்ப் லைன் எண்ணுக்கு தொடர்பு கொண்டு பயனடையலாம் என தெரிவித்துள்ளார்.

**விவசாயிகளிடம் நேரடி நெல் கொள்முதல்: துணை ஆட்சியர் அறிவுரை**

First Published : 27 Jul 2011 03:13:55 PM IST

திருவள்ளூர், ஜூலை 26: மாவட்டத்தில் உள்ள நெல் கொள்முதல் மையங்களில் இடைத்தரகர்களின் இடையூறு இல்லாமல் விவசாயிகளிடம் நேரடியாக நெல் கொள்முதல் செய்ய வேண்டும் என கூட்டுறவு சங்க கூட்டத்தில் பேசிய திருவள்ளூர் மாவட்ட துணை ஆட்சியர் சித்திரசேனன் கூறினார்.

திருவள்ளூர் மாவட்ட கூட்டுறவுத்துறை சார்பில் திருப்பாச்சூர், குத்தம்பாக்கம், காக்கவாக்கம் கூட்டுறவு சங்கங்களுக்கு விழிப்புணர்வு கூட்டம் சனிக்கிழமை கூட்டுறவு சங்கங்களின் இணைப்பதிவாளர் அமலதாஸ் தலைமையில் நடைபெற்றது. பொதுவிநியோக திட்ட துணைப்பதிவாளர் லோகநாதன் முன்னிலை வகித்தார். சரக துணைப்பதிவாளர் சண்முகவள்ளி வரவேற்றார்.

இதில் சிறப்பு அழைப்பாளராக மாவட்ட துணை ஆட்சியர் சித்திரசேனன் பங்கேற்று பேசும்போது, திருவள்ளூர் மாவட்டத்தில் உள்ள நெல்கொள்முதல் மையங்களில் இடைத்தரகர்கள் இடையூறு காரணமாக விவசாயிகளிடம் இருந்து நேரடியாக நெல் கொள்முதல் செய்யப்படுவதில்லை. இதனால் விவசாயிகள் பாதிக்கப்படுகின்றனர் என பல புகார்கள் வருகின்றன.

இதைத் தவிர்க்கும் வகையில் அனைத்து நெல் கொள்முதல் மையங்களிலும் விவசாயிகளிடம் அரசு நிர்ணயித்த விலையில் நேரடியாக நெல் கொள்முதல் செய்ய வேண்டும் என்றார். தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழக திருவள்ளூர் மண்டல மேலாளர் கோபி நன்றி கூறினார்.

தினமலர்

**வேதனையில் தேயிலை விவசாயிகள்!**

ஜி.வின்சென்ட் குமார்

First Published : 28 Jul 2011 03:21:59 AM IST



கோத்தகிரி: பசுந்தேயிலை விலை வீழ்ச்சி தொடர்வதால் பொருளாதாரச் சரிவு ஏற்பட்டு தேயிலை விவசாயிகள் பிழைப்பு தேடி சமவெளிப் பகுதிகளுக்கு இடம் பெயரும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

நீலகிரி மாவட்டத்தில் 12-ஆயிரத்திற்கும் மேற்பட்ட தேயிலைத் தொழிற்சாலைகளும் 25-ஆயிரத்திற்கும் மேற்பட்ட சிறு, குறு விவசாயிகளும், பல்லாயிரக்கணக்கான தோட்டத் தொழிலாளர்களும் உள்ளனர்.

இம்மாவட்டத்தில் உள்ள கூடலூர், உதகை,குன்னூர்,மஞ்சூர் போன்ற பகுதிகளில் 20 சதவீதம் தேயிலை விவசாயமும், 80 சதவீதம் தட்ப - வெப்ப நிலைக்கேற்ப காய்கறிகள், காபி, மிளகு மற்றும் வாசனைத் திரவியங்கள் பயிரிடப்படுகின்றன.

கோத்தகிரியில் 90 சதவீத மக்கள் தேயிலையையும்,தேயிலை தொழிற்சாலையையும் நம்பியே வாழ்கின்றனர்.

கடந்த 5 மாதங்களுக்கு முன்பு கெண்டை பனி கொட்டியதால் தேயிலையை நோய் தாக்கியது. தொடர்ந்து கோடை வெயில் சுட்டெரித்ததால் தேயிலை மகசூல் குறைந்தது. இதனால்,

பசுந்தேயிலைக்கு அடிப்படை விலை ரூ.12.50 கொடுக்கப்பட்டது. முதல் தரமுள்ள தேயிலைக்கு ரூ.16 வரை கொடுக்கப்பட்டது. விவசாயிகளுக்கு இந்த விலை ஓரளவு போதுமானதாக இருந்தது.

ஆனால் இப்போது தொடர்ந்து மழை பெய்து கொண்டிருப்பதால் பசுந் தேயிலை விளைச்சல் அதிகரித்து விலை வீழ்ச்சியடைந்துள்ளது. தொழிற்சாலைகள் உபரி தேயிலையை வாங்க மறுப்பதோடு கோட்டா முறையை (கோட்டா முறை என்பது தொழிற்சாலைகளில் உறுப்பினர்களாக இருப்பவர்களிடம் எவ்வளவு கிலோ பசுந்தேயிலை கொள்முதல் செய்ய முடியும் என்பதை ஏற்கனவே தெரிவித்து விடுவதாகும்) அமல்படுத்தியுள்ளதால் விவசாயிகள் விரக்தி அடைந்துள்ளனர்.

ஒரு விவசாயியின் தோட்டத்தில் 1,000 கிலோ தேயிலை விளைந்தால் அதில் கோட்டாமுறைப்படி அவரிடம் 400 அல்லது 500 கிலோ மட்டுமே தொழிற்சாலை பெறமுடியும். மீதமுள்ள 500 கிலோ பசுந்தேயிலை பறிக்கப்படாமலேயே விட்டு விடுவதால் வீணாகி விடுகிறது. தேயிலை வரத்து மிகவும் அதிகரித்து வருவதால் கிலோ ரூ.15 என இருந்த தேயிலை தற்போது கிலோ ரூ.5 ஆகக் குறைந்துள்ளது. இதில் முன்பணம் ரூ.2 பிடித்தம் போக மீதி ரூ.3 மட்டுமே கிடைக்கிறது. இந்தத் தொகையில் உரம், சுத்திகரிப்பு என அதிகபட்ச செலவு ஏற்படுவதால் இறுதியில் இலை பறித்தவருக்கு கடன் வாங்கி கூலி கொடுக்க வேண்டிய அவல நிலை ஏற்பட்டுள்ளதாக கவலை தெரிவிக்கின்றனர் விவசாயிகள்.

மாவட்டத்தில் பிற பகுதியைக் காட்டிலும் கோத்தகிரி மக்கள் 90 சதவீதம் தேயிலையை மட்டுமே நம்பி இருப்பதால் தேயிலைக்கும் விலை இல்லாமல் போகும்போது இதனையே நம்பி இருக்கும் விவசாயிகளின் கவனம் முழுவதும் கந்து வட்டி கடைகள் பக்கமே திரும்பியுள்ளது. இதில் பலர் ஏற்கனவே வட்டி கட்ட முடியாமல் தோட்டத்தை கந்து வட்டிக்காரர்களிடமே விட்டுவிட்டு வேலைதேடி கோவை, திருப்பூர் என சமவெளிப் பகுதிக்குப் போய்விட்டனர்.

மீதமுள்ளவர்கள் உரிய வருமானம் இல்லாததால் தங்கள் பிள்ளைகளை பள்ளி, கல்லூரிகளில் சேர்க்க முடியாமல் திணறி வருகின்றனர்.

கடந்த ஆட்சியில் தேயிலை விலை வீழ்ச்சி ஏற்பட்ட போது மானியம் கொடுக்கப்பட்டது. அதேபோல் இந்த அரசும் மானியம் கொடுத்து உதவுமா என்ற எதிர்பார்ப்பில் உள்ளனர் விவசாயிகளும், தோட்டத் தொழிலாளர்களும்.

அடுத்த சில மாதங்களும் மழைக் காலமே என்பதால் தேயிலை மகசூல் அதிகரிக்கவே செய்யும். எனவே பசுந்தேயிலைக்கு அடிப்படை விலையை அரசே முடிவு செய்து அறிவிக்க வேண்டும். லட்சக்கணக்கான தோட்டத் தொழிலாளர்கள் மற்றும் விவசாயிகளின் எதிர்காலத்தை காக்க அரசு உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று எதிர்பார்க்கின்றனர் விவசாயிகள்.

திட்ட ஒருங்கிணைப்பாளர் தகவல்பயிர் காப்பீட்டு திட்டம்ரூ.9 லட்சம் இழப்பீடு

பதிவு செய்த நாள் : ஜூலை 28,2011,02:21 IST

ராசிபுரம்: "நாமக்கல் மாவட்டத்தில், பயிர் காப்பீட்டு திட்டத்தின் கீழ், ஒன்பது லட்சத்து 43 ஆயிரம் ரூபாய் இழப்பீட்டு தொகை வழங்கப்பட்டுள்ளது' என, மாவட்ட பயிர் காப்பீடு திட்ட ஒருங்கிணைப்பாளர் கணபதி தெரிவித்துள்ளார்.அவர் வெளியிட்ட அறிக்கை:நாமக்கல் மாவட்டத்தில், ராசிபுரம் தாலுகாவுக்கு உட்பட்ட எலச்சிபாளையம் பகுதியில், நிலக்கடலை சாகுபடி செய்ய கூட்டுறவு சங்கத்தின் மூலம் பயிர்க்கடன் பெற்ற, 91 விவசாயிகளுக்கு கடந்த, 2009ம் ஆண்டு வறட்சியின் காரணமாக மகசூல் இழப்பு ஏற்பட்டது.அதற்காக, 4 லட்சத்து 8 ஆயிரத்து 772 ரூபாயும், கொல்லிமலை வட்டாரத்துக்கு உப்பட்ட பவர்காடு கூட்டுறவு சங்கத்தில், மரவள்ளி சாகுபடி செய்ய கடன் பெற்ற, 80 விவசாயிகளுக்கு மகசூல் இழப்பீடு தொகையாக, இரண்டு லட்சத்து 86 ஆயிரத்து 73 ரூபாய் வழங்கப்பட்டுள்ளது.மேலும், காரீப் பருவத்தில் எருமப்பட்டி வட்டாரத்தில் கார்நெல் சாகுபடி செய்ய கூட்டுறவு சங்கத்தில் கடன் பெற்ற, 12 விவசாயிகளுக்கு மகசூல் பாதிப்பு தொகை ஒரு லட்சத்து 13 ஆயிரத்து 84 ரூபாய், மஞ்சள் பயிர் சாகுபடி செய்ய கடன் பெறாத விவசாயிகளுக்கு கூட்டுறவு சங்கத்தில் இன்சூரன்ஸ் செய்த வகையில் இழப்பீடு தொகை, ஒரு லட்சத்து 14 ஆயிரத்து 934 ரூபாய் வழங்கப்பட்டது.கடந்த ஆண்டு, 2010ல் காரீப் பருவத்தில், சேந்தமங்கலம் வட்டாரத்தில் சம்பா நெல் சாகுபடி செய்ய கூட்டுறவு சங்கத்தில் பயிர் கடன் பெற்ற, 31 விவசாயிகளுக்கு மகசூல் இழப்பீடு தொகை, 20 ஆயிரத்து 115 ரூபாய் என மொத்தம், ஒன்பது லட்சத்து 43 ஆயிரம் ரூபாய் வழங்கப்பட்டுள்ளது.நாமக்கல் மாவட்டத்தில் உள்ள அனைத்து விவசாயிகளும், நடப்பு காரீப் பருவத்தில், தமிழக அரசு அறிவித்துள்ள நெல்கார், நிலக்கடலை, பாசிப்பயறு, மக்காச்சோளம், மஞ்சள், வெங்காயம், மரவள்ளி, வாழை, அன்னாசி உள்ளிட்ட பயிர்களை சாகுபடி செய்யலாம்.அவ்வாறு பயிரிடும் அனைத்து விவசாயிகளுக்கும், பயிர் கடன், நகைக்கடன், விவசாயக்கடன் வழங்கப்படுகிறது. மேலும், பயிர் கடன் பெறாத விவசாயிகளும் இத்திட்டத்தில் சேர்ந்து பயன்பெறலாம். தேவையான விபரங்களுக்கு, அருகில் உள்ள கூட்டுறவு சங்க செயலாளர், தோட்டக்கலைத்துறை அலுவலர்களை தொடர்பு கொள்ளலாம்.இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**பி.டி.,பருத்தி அதிக விலைக்கு விற்பவர்கள் மீது நடவடிக்கை: கலெக்டர் எச்சரிக்கை**

பதிவு செய்த நாள் : ஜூலை 28,2011,02:04 IST

தர்மபுரி: தர்மபுரி மாவட்டத்தில், பி.டி.,பருத்தியை கூடுதல் விலைக்கு விற்பனை செய்பவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும்.கலெக்டர் லில்லி வெளியிட்ட அறிக்கை:தர்மபுரி மாவட்டத்தில், பி.டி., பருத்தி சாகுபடி பருவம் துவங்கியுள்ளது. இதற்காக, பி.டி., பருத்தி ரகங்களை வெளி மாநிலங்களில் இருந்து கொள்முதல் செய்யப்பட்டு, தர்மபுரி மாவட்ட விதை விற்பனை மையங்களில் விற்பனை நடந்து வருகிறது. பி.டி.,பருத்தி போல்கார்டு 1 ரகம் விலை, 830 ரூபாய் ஒரு பாக்கெட் வீதமும், போல்கார்டு 2 ரகம், 930 ரூபாய் ஒரு பாக்கெட் வீதம் விலை நிர்ணயம் செய்யப்பட்டு விற்பனை நடந்து வருகிறது. நிர்ணயிக்கப்பட்ட விலைக்கு அதிகமாக பி.டி.,பருத்தி விதை விற்பனை செய்யப்படுவதாக, கலெக்டருக்கு ரகசிய தகவல் வந்துள்ளது. இதை தொடர்ந்து, விதை ஆய்வு துணை இயக்குனர் மணி தலைமையில் சிறப்பு குழு மூலம் மொரப்பூர் மற்றும் அதன் சுற்றுவட்டாரங்களில் உள்ள தனியார் விதை விற்பனை நிலையங்களில் திடீர் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. அப்போது, தவறு செய்த விற்பனை நிலையங்கள் மீது உரிமத்தை தற்காலிகமாக ரத்து செய்தும், விதை விற்பனை தடை உத்தரவு வழங்கியும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மேலும், விதை வாங்கிய விவசாயிகளிடம் இருந்து விலை விபரங்கள் குறித்து விசாரித்து உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. தர்மபுரி மாவட்ட விதை விற்பனையாளர்கள் பி.டி., பருத்தியை நிர்ணயித்த விலைக்கு மேல் விற்பனை செய்தால், கடும் நடவடிக்கை எடுக்கப்படும். பி.டி., பருத்தியை மானாவாரியாக சாகுபடி செய்யக்கூடாது. இறவை பாசனத்தில் மட்டும் சாகுபடி செய்ய வேண்டும். பி.டி., பருத்தி பாக்கெட்டுடன் வரும் நான் பி.டி., மற்றும் துவரை விதைகளை பி.டி., பருத்தி சாகுபடி வயலை சுற்றி பாதுகாப்பு அரணாக கண்டிப்பாக சாகுபடி செய்ய வேண்டும். இவ்வாறு அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

**கி.கிரியில் மூலிகை கண்காட்சி**

பதிவு செய்த நாள் : ஜூலை 28,2011,01:55 IST

கிருஷ்ணகிரி: கிருஷ்ணகிரி அரசு அருங்காட்சியகத்தில் மாணவர்கள் மற்றும் பொதுமக்களுக்கு இயற்கை தாவரங்களின் மூலிகை பண்பு அறிந்து கொள்ளம் வகையில் சிறப்பு மூலிகை கண்காட்சி கடந்த 26ம் தேதி துவங்கி வரும் 31ம் தேதி வரை நடக்கிறது. கண்காட்சி துவக்க விழாவுக்கு, அருங்காட்சியக காப்பாட்சியர் கோவிந்தராஜ் தலைமை வகித்தார். அரசு தலைமை மருத்துவனை சித்தா பிரிவு உதவி மருத்துவ அலுவலர் டாக்டர் மஞ்சுஹேமமாலினி கண்காட்சியை துவக்கி வைத்தார். குப்பை மேனி, வசம்பு, பொடுதலை, நித்யகல்யாணி, துளசி, மஞ்சள் கரிசலாங்கண்ணி,

சிரியா நங்கை, முடக்கற்றான், மிளகாய் பூன்டு, செம்பருத்தி, கீழாநெல்லி உள்ளிட்ட 90 வகை மூலிகை செடிகளும், 21 அட்டை படங்களும், 50 சித்த மருந்துகளும் விளக்கங்களுடன் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளது. ஏற்பாடுகளை அருங்காட்சியக தொழில் நுட்ப உதவியாளர் அசோகன் மற்றும் பணியாளர்கள் திருவள்ளுவன், கிருஷ்ணன் ஆகியோர் செய்திருந்தனர். தினம் காலை 9.30 மணி முதல் மாலை 5 மணி வரை நடக்கும் கண்காட்சியை பள்ளி மாணவ, மாணவிகள் மற்றும் பொதுமக்கள் ஏராளமானோர் பார்த்து வருகின்றனர்.

**உரக்கிடங்கு அமைக்க மானியம்**

பதிவு செய்த நாள் : ஜூலை 28,2011,00:31 IST

திருப்பூர் : "உரக்கிடங்கு அமைக்க 5,000 ரூபாய் மானியம் வழங்கப்படுகிறது,' என, தோட்டக்கலைத்துறை உதவி இயக்குனர் பால்ராஜ் தெரிவித்தார்.அவர் மேலும் கூறியதாவது:திருப்பூர் மாவட்டத்துக்கு உட்பட்ட வடக்கு, தெற்கு, பெருமாநல்லூர் வட்டார விவசாயிகளுக்கு மா, நெல்லி, கோ-கோ, திசுவாழை ஆகிய பயிர் வளர்ப்புக்கும், அதன் பரப்புகளை அதிகரிக்கவும், தேசிய தோட்டக்கலைத்துறை சார்பில் 48 லட்சம் ரூபாய் மானியம் ஒதுக்கப்பட்டுள்ளது. மா (மாம்பழம்) வளர்ப்புக்கு ஹெக்டேருக்கு 400 மரக்கன்றுகளுக்கு, 24 ஆயிரம் மதிப்புள்ள உரம் வழங்கப்படும். நெல்லி வளர்ப்புக்கு ஓராண்டு மானியமாக 275 மரக்கன்றுகள் வழங்கப்படும். கோ-கோ பயிருக்கு 500 மரக்கன்றுகளும், ரூ.12 ஆயிரம் மதிப்புள்ள உரங்களும் வழங்கப்படும். 2,260 திசு வாழைகள் திசு வாழை வளர்ப்புக்காக வழங்கப்படும். தவிர, இரண்டு மண்புழு உரக்கிடங்கு அமைக்க 5,000 ரூபாய் மானியம் வழங்கப்படும். இம்மானியங்களை பெற்றுக் கொள்ள, புதிய மானியம் குறித்து விவரங்களை அறிந்து கொள்ள கலெக்டர் அலுவலகத்தில் உள்ள வட்டார வேளாண் விரிவாக்க மையத்தை தொடர்பு கொள்ளலாம், என்றார்.

**விதை கிராம பயிற்சி முகாம் தேதி மாற்றம்**

பதிவு செய்த நாள் : ஜூலை 28,2011,03:27 IST

குன்றம் : திருப்பரங்குன்றம் வட்டாரத்தில், விதைக் கிராம திட்டத்தின்கீழ் நடக்கும் விதைகள் தயாரிக்கும் பயிற்சி முகாம் தேதி மாற்றப்பட்டுள்ளது.திருப்பரங்குன்றம் வட்டார ளோண்மை உதவி இயக்குநர் செல்வன் அறிக்கை: விவசாயிகளின் அடிப்படை புள்ளி விபரம் சேகரிப்பு பணிகள் நடப்பதால், ஏற்கனவே அறிவித்திருந்தபடி, விதைகள் தயாரிப்பதற்கான பயிற்சி முகாம்

தேதிகளில் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. நிலக்கடை பயிற்சி ஆக.1ல் சோளங்குருணியிலும், பயறு வகைகள் ஆக. 4ல் வலையங்குளத்திலும், ஆக. 10ல் சின்ன உடைப்பு கிராமத்திலும் நடக்கும்.

**நெற்பயிரில் அதிக லாபம் பெற வேளாண் துணை இயக்குனர் தகவல்**

பதிவு செய்த நாள் : ஜூலை 27,2011,23:08 IST

விருத்தாசலம் : நெல் அறுவடைக்கு பின் நேர்த்தி தொழில் நுட்பங்களை கையாண்டால் அதிக லாபம் பெறலாம் என வேளாண்மை துணை இயக்குனர் தனவேல் தெரிவித்தள்ளார்.இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு:நெற்கதிரின் மணிகள் 80 சதம் மஞ்சள் நிறமாக மாறி இருந்தாலே அறுவடையை மேற்கொள்ளலாம். இதனால் மணிகள் உதிர்ந்து சேதாரமாவதைத் தடுக்கலாம்.அறுவடையின் போது ஈரப்பதம் 19 முதல் 23 சதம் இருக்க வேண்டும். நேரடி நெல் கொள்முதல் நிலையங்களுக்கு கொண்டு வரும் நெல்லின் ஈரப்பதம் 17 சதத்திற்குள் இருக்க வேண்டும். அறுவடை செய்த நெல்லை நன்றாக காயவைத்து, சுத்தம் செய்து ஈரப்பதம் 13 சதத்திற்கு குறைக்க வேண்டும். இதனால் பூஞ்சாண வித்துக்கள் பரவி நெல்லின் தரம் பாதிக்கப்படுவதை தடுக்கலாம்.அந்து பூச்சிகள் தாக்காமல் இருக்க மாலத்தியான் மருந்து 10 மி.லி., ஐ ஒரு லிட்டர் நீரில் கலந்து தரைப்பகுதி மற்றும் மூட்டைகள் மீது தெளிக்க வேண்டும். ரகங்கள் வாரியாக தரம் பிரித்து விற்பனைக்கு கொண்டு வந்து ஒழுங்குமுறை விற்பனை கூடங்கள் மூலம் விற்று லாபம் பெற முடியும்.இவ்வாறு செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

**விதை பரிசோதனை நிலையத்தை விவசாயிகள் பயன்படுத்த அறிவுரை**

பதிவு செய்த நாள் : ஜூலை 27,2011,23:33 IST

விழுப்புரம் : விதை உற்பத்தியாளர்கள், விற்பனையாளர்கள் உற்பத்தி செய்த அல்லது விவசாயிகள் சாகுபடிக்கு பயன்படுத்தும் விதைகளை பரிசோதனை செய்து கொள்ளலாம்.இது குறித்து விதை பரிசோதனை நிலைய வேளாண்மை அலுவலர் ரேவதி விடுத்துள்ள செய்திக் குறிப்பு:விதை பரிசோதனை நிலையத்தில் விதைகளின் புறத்தூய்மை, ஈரப்பதம், பிற ரக கலப்பு மற்றும் முளைப்பு திறன் பரிசோதனை செய்து முடிவுகள் உரிய காலத்தில் அறிவிக்கப்படும். விதையின் புறத் தூய்மை, ஈரப்பதத்தை பொறுத்து சேமிப்பு காலத்தில் பூச்சி, பூஞ்சானம் தாக்குதல் இருக்கும்.சேமிக்கும் விதையின் புறத்தூய்மை, ஈரப்பதத்தை கண்டறிந்து சேமித்தால் பூச்சி, பூஞ்சாணம் தாக்குதலை தவிர்த்து, விதைகளின் முளைப்பு திறன் பாதிக்காமல் சேமிக்கலாம்.

சாகுபடிக்கு அல்லது விதை உற்பத்திக்கு பயன்படுத்தும் விதை குவியலின் முளைப்பு திறன் அறிந்து விதையின் அளவை குறைத்து அல்லது அதிகப்படுத்தி பயிரிடும் போது பயிர் எண்ணிக்கை பராமரிக்க ஏதுவாக இருக்கும்.விதை விற்பனையாளர்கள் தங்கள் விதையின் தரத்தை கண்டறிந்து நம்பகத் தன்மை கெடாமல் இருக்க தங்களிடம் உள்ள அனைத்து விதைகளையும் பரிசோதித்து விநியோகிக்க வேண்டும். விதை மாதிரிக்கு 30 ரூபாய் பரிசோதனை கட்டணமாக செலுத்தி பரிசோதித்து கொள்ளலாம்.இவ்வாறு வேளாண் அலுவலர் ரேவதி தெரிவித்துள்ளார்.

தினகரன்

**எத்தியோப்பியாவில் பருத்தி தமிழக நிறுவனம் அறுவடை**

பதிவு செய்த நாள் : 7/28/2011 0:36:10

கருத்துகள்

கருத்துகளை தெரிவிக்க



புதுடெல்லி: ஆப்ரிக்க நாடான எத்தியோப்பியா நாட்டில் 25,000 ஏக்கர் பரப்பளவில் பருத்தி சாகுபடி மற்றும் அறுவடையில் தமிழகத்தை சேர்ந்த நிறுவனம் ஈடுபட்டுள்ளது. கோவையை சேர்ந்த சாரா காட்டன் பைபர்ஸ் என்ற அந்நிறுவனம், எத்தியோப்பியாவில் பருத்தியில் இருந்து கொட்டை நீக்கும் ஆலையையும் அமைத்துள்ளது. அந்நாட்டின் ஆமோ நதிக் கரையில் இந்த 25,000 ஏக்கர் நிலம் உள்ளது. இந்த அளவு மிகப் பெரிய பரப்பில் ஒரே நேரத்தில் பருத்தி பயிரிடுதல் மற்றும் அறுவடையை எத்தியோப்பியா இதுவரை கண்டதில்லை என்பது குறிப்பிடத்தக்கது. பருத்தி மட்டுமின்றி சோயா பயிரிடுதலிலும் இந்நிறுவனம் ஈடுபடுகிறது.